2008 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

3. தகவல் கோரல்

மதுரை நகரின் சில பகுதிகளில் காலரா நோய் பரவுவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை நகரின் சில பகுதிகளில், காலரா நோய் பரவி வருவதைத் தடுக்க எடுக்கவேண்டிய உரிய நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பாக அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

முற்பகல் 11-00

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரில், சில பகுதிகளில், குறிப்பாக 22-லிருந்து 26-வது வட்டம் முடியவுள்ள பகுதிகளில் காலரா நோய் பரவி வருவதாக நேற்றைக்கு எனக்குத் தகவல் கிடைத்தது. உடனடியாக மாவட்ட ஆட்சியர், ஆணையர் அலுவலகம், மேயர் ஆகியோரோடு தொடர்பு கொண்டேன். மதுரை மாநகராட்சி மருத்துவ அலுவலர்களோடும் தொடர்பு கொண்டேன். உரிய நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரிவித்தார்கள். அது மாநகராட்சிப் பகுதி என்றாலும்கூட, மக்கள் நல்வாழ்வுத் துறையும் இணைந்து இந்தப் பணிகளை மேற்கொண்டால் மேலும் இது பரவாமல் தடுக்கமுடியும் என்கிற உணர்வோடு இந்தக் கவன ஈர்ப்பை நான் கொண்டுவந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட பகுதிகள் மாநகராட்சியைச் சார்ந்தவையாகும். இருந்தாலும், இந்தப் பகுதியில் மாநகராட்சி நல வாழ்வு மையம் 16—பட்டுத்தோப்பு, வார்டு 22, 23, 24 பகுதிகளில் வயிற்றுப் போக்கு இருப்பதாக சுகாதாரப் பாதுகாவலர்கள் மூலமாக 4-4-2008 அன்று காலை பத்து மணியளவில் தகவல் பெறப்பட்டது. உடனடியாக அந்தப் பகுதியைச் சார்ந்த அனைத்துக் களப் பணியாளர்களும் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று வியாதி ஏற்பட்ட குடும்பங்களில் உள்ள நபர்களைச் சந்தித்து நோய் ஏற்பட்ட காலம், உண்ட உணவு, பருகிய நீரின் தன்மை, தொற்று நோய் ஏற்படக் காரணம் ஆகியவற்றை கேட்டறிந்தனர். நான்கு பேர் கொண்ட மருத்துவக் குழுக்கள் நான்கு அமைக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியாகச் சென்று வயிற்றுப்போக்கு உள்ள நபர்களுக்கு antibiotics மற்றும் O.R.S. packets அனைத்தும் விநியோகம் செய்யப்பட்டன. மக்களுக்கு சுகாதாரக் கல்வி, தன் சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. 8-4-2008 அன்று மாலை 4-00 மணியளவில் முதன்மை நல அலுவலர் தலைமையில் மருத்துவக் குழு அலுவலர்களுக்கும், சுகாதார ஆய்வாளர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டு வீடு வீடாகச் சென்று நோயாளிகளைப் பார்வையிட்டு நலக் கல்வி அளிக்கப்பட்டது. செகண்டு தெருவில் உள்ள வார்டு 22—ல் மட்டும் தண்ணீர் மாசுபட்டிருப்பது பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் 126 பேர் பாதிக்கப்பட்டார்கள். மருத்துவமனையில் உள்நோயாளிகளாக 40 நபர்கள் அனுமதிக்கப்பட்டு இப்போது நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இதுசம்பந்தமாக மதுரை மாநகரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, வார்டுகள் 22, 23, 24-க்கு சுகாதாரத் துறை இணை இயக்குநர் தலைமையில் ஒரு குழு அனுப்பி வைக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், சென்னையில் இருந்து பொது சுகாதாரத் துறை இணை இயக்குநரையும் அனுப்பி நேரில் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

2008 ஏப்ரல் 11] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

இந்த நோயினுடைய தாக்கம் இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ள செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன். இது பொன்னகரம் பகுதியிலே கட்டுப்படுத்தப்படுகிறபோது செல்லூருக்கும் பரவுகிறது என்ற ஒரு தகவலும் இருக்கிறது. இது மேலும் பரவக்கூடாது; வீண் பீதிக்கும் மக்கள் ஆளாகவேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. உரிய நடவடிக்கையைத் தொடர்ந்து எடுக்குமாறு கேட்டு அமைகிறேன்.

4. கவன ஈர்ப்பு

மேட்டூர் அணை திறக்கப்படாததால் ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூர் அணையிலிருந்து காவிரி தண்ணீர் திறந்து விடப்படாததால், ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது: